## இயல் - 1

## அற இலக்கியங்களில் நிலையாமைக் கருத்துக்கள்

நிலையில்லாத ஒன்றைத்தான் மக்கள் நிலையானதென்று நினைக்கின்றனர். அதாவது இவ்வுலக இன்பத்தையே உண்மையென்று நினைக்கின்றனர். உண்டு களித்துப் பெண்களுடன் உறவாடுவதே இவ்வுலகில் மக்கள் அடையும் இன்பம் என்று எண்ணுகின்றனர். ஆதலால் அவர்கள் மதுவை விலக்கவில்லை, மாமிசத்தை வெறுக்கவில்லை, பெண் இன்பத்தையும் ஒதுக்கவில்லை என்பதை சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது. ஆனால் அற இலக்கியங்கள் இக்கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை.

### நிலையாமைக் கருத்துக்கள்

நிலையாமை பற்றி மூன்று நிலைகளில் பேசப்படுகிறது. செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்பதாகும். உடல் அழிந்துவிடும், இளமை நீங்கி விடும், செல்வம் அழிந்து விடும், அழகும் சிதைந்துவிடும். அதனால் இன்பம் என்றும் நிலையானது கிடையாது. ஆனால் அறம் ஒன்று மட்டுமே அழிவற்றது. ஆதலால் நல்லறங்களைச் செய்து இறந்த பின் நல்வாழ்வு பெற வழிதேட வேண்டும் என்று அற இலக்கியங்கள் இக்கொள்கையை வலியுறுத்துகின்றன. நிலையாமை பற்றித் தொல்காப்பியர்,

“காஞ்சி தானே பெருந்திணைப் புறனே
பாங்கருஞ் சிறப்பிற் பன்னெறி யானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே”[1]

என்ற நூற்பாவின் மூலம் உணர்த்துகின்றார். காஞ்சித்திணை என்பது நிலையாமை பற்றிக் கூறுவதாகும். மனித உலகில் காணப்படும் மனிதன் நிலையானது என எண்ணும் பொருள்களின் நிலையாமையை பற்றியதாகும். காஞ்சி என்னும் புறத்திணையானது பெருந்திணை என்னும் அகத்திணைக்குப்

புறனாக அமைந்துள்ளது. வாழ்க்கை நிலையானது கிடையாது என்பதையே வள்ளுவரும்,

> "நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்
> புல்லறி வாண்மை கடை" [2]

என்று வலியுறுத்துகின்றார். இக்கருத்தில் எதுவுமே நிலைத்திருக்கக் கூடியதன்று என்கிறார். இதனை மக்கள் உணரவேண்டும் என்பதற்காகவே இக்குறட்பா எடுத்துரைக்கப்படுகிறது. வாழ்க்கையின் நிலையில்லாதத் தன்மையை ஆராய்ந்து அறியாதவர்கள் அறிவில்லாதவர்கள் என்பதை உணர்த்தவே வள்ளுவர்,

> "ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
> கோடியும் அல்ல பல" [3]

எனும் குறட்பாவை எடுத்துரைக்கின்றார். நிலையில்லாத வாழ்க்கையை வாழ்கின்ற மக்கள் தங்கள் மனதில் பலகோடி எண்ணங்களை எண்ணுகின்றனர் என்று கூறுகின்றார். அற இலக்கியங்களான பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் இடம் பெற்றுள்ள நிலையாமைக் கருத்துக்கள் பற்றி இவ்வியலில் ஆராயப்பட உள்ளன.

## செல்வம் நிலையாமை

நிலையில்லாதவற்றுள் செல்வமும் ஒன்று. அத்தகு செல்வம் நிலையற்றது என்பதனையே,

> "அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
> மறுசிகை நீக்கியுண் டாரும் - வறிஞராய்ச்
> சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழ்எனின் செல்வம்ஒன்

றுண்டாக வைக்கற்பாற் றன்று”[4]

என்று நாலடியார் எடுத்துரைக்கிறது. ஆறு சுவையுடன் கூடிய உணவை மனைவி உண்பிக்க மறு உணவை வேண்டாம் என்று தள்ளி நீக்கி உண்ட பெருஞ்செல்வம் உடையவரும் அச்செல்வத்தை இழந்து வறியவராகி வேறொரிடத்தில் சென்று உணவைப் பிச்சை எடுப்பார். அதனால் செல்வம் என்பது நிலையில்லாதத் தன்மை கொண்டதாகும். செல்வமானது யாரிடத்தும் நிலைத்து இருக்காது. ஆதலால் உடனே பலருக்கும் கொடுத்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதனை,

“துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்”[5]

என்று நாலடியார் உணர்த்துகின்றது. செல்வம் என்பது வண்டியின் சக்கரத்தைப் போல கை மாறி மாறி வருவதாகும். அதனால் செல்வம் உண்டானபோதே விருந்தினருக்குக் கொடுத்து உதவ வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

பெருமையை அளிக்கக் கூடியப் பொருளை மிகுதியாகச் சேர்த்து வைத்துள்ள செல்வர்கள் தமது முதுமைக் காலத்தில் பயன்பட வேண்டும் என்று எண்ணி செல்வத்தை இறுக்கமாகப் பிடித்து வைக்கக் கூடாது என்பதனை,

“என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்
பின்னாவ தென்று பிடித்திரா – முன்னே
கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்
தொடுத்தாறு செல்லும் சுரம்”[6]

எனும் நாலடியார் எடுத்துரைக்கிறது. செல்வம் உள்ள இளமைப் பருவத்திலேயே பல அறங்களைச் செய்ய வேண்டும். அறங்களைச் செய்தவர்கள் புண்ணிய உலகம் செல்வார்கள் என தெளிவுப்படுத்துகிறது.

நாம் இப்போது பெருஞ்செல்வர் என்று மகிழ்ந்து மற்றவர்களை மதிக்காமல் வாழ்கின்ற சிற்றறிவு உடையவர்களின் செல்வமானது நிலைத்து நிற்காது. இதனையே,

“செல்வர்யாம் என்றுதாம் செல்வுழி எண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வம் - எல்லில்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி
மருங்கறக் கெட்டு விடும்” [7]

இரவில் தோன்றுகின்ற மின்னலைப் போலச் சிறிது காலம் தோன்றி இருந்த இடம் தெரியாமல் அழிவது போல செல்வமானது தோன்றி அழிந்து விடும் என நாலடியார் உணர்த்துவதை அறியமுடிகின்றது.தேனீக்கள் தேனைத் தேடிக் கொண்டுவந்து கூட்டில் சேர்த்து வைப்பது போல, செல்வர்கள் பொருளைத்தேடி சேர்த்து வைக்கின்றனர். இதனை,

“உடாஅதும் உண்ணாதும் தம்உடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார் - கொடாஅது
வைத்தீட்டி னார்இழப்பர், வான்தோய் மலைநாட
உய்த்தீட்டும் தேனீக் கரி” [8]

எனும் பாடல் உணர்த்துகின்றது. நல்ல ஆடைகளை உடுத்தாமலும், நல்ல உணவுகளை உண்ணாமலும், தம் உடம்பை வருத்தியும் பொருள்களைச் சேர்த்து வைத்தவர் அதனை இழந்தவர் ஆவர். ஆறவழியில் பொருளைச் செலவு செய்யாதவர் ஒரு காலத்தில் தேனீயைப் போல அப்பொருளை

இழந்துவிடுவா் என்பதை உணரமுடிகிறது. யானையின் மீது ஏறிச் சென்ற அரசரும் தீவினையின் காரணத்தால் ஒரு காலத்தில் வறுமை நிலையை அடைவார்கள்,

"யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை
வினைஉலப்ப வேறாகி வீழ்வா்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள" [9]

என்று நாலடியார் எடுத்துரைக்கின்றது. யானையின் மீது சென்ற அரசரின் நிலையே மாறுகின்ற போது, மக்களின் நிலையும் மாறும். அதனால் வறுமை நிலை அடைவதற்கு முன்பு பலருக்கு உதவி செய்ய வேண்டும். தீவினையின் காரணத்தால் அரசரே வறியவராகின்றார். ஆதலால் செல்வம் இருக்கின்ற போதே பல அறங்களைச் செய்யவேண்டும் என்பதை அறியமுடிகிறது.செல்வம் வந்து சேர்தல் என்பது கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றதாகும் என்பதை,

"கூத்தாட்டு அவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று" [10]

எனும் வள்ளுவரின் குறள்மூலம் உணரமுடிகின்றது. பெரிய செல்வம் என்பது கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றதாகும். செல்வம் நீங்கிப் போவது கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும் என்பதை வள்ளுவர் சுட்டிக்காட்டுகின்றார். செல்வம் நிலையில்லாத இயல்பை உடையது. இதனையே,

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்" [11]

என வள்ளுவர் விளக்குகின்றார். நிலையில்லாத செல்வத்தைப் பெற்றவுடன் பெற்ற அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்ய வேண்டும் என எடுத்துரைக்கின்றார். செல்வம் நிறைந்தவர்கள் பண்புடையவராக ஒழுகுதல் வேண்டும் என்பதை வள்ளுவர்,

“எல்லார்க்கும் நன்றுஆம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து”[12]

என்ற குறள்வழி விளக்குகின்றார். பண்புடையவராக ஒழுகுதல் பொதுவாக எல்லார்க்கும் நல்லதாகும். அவர்களுள் செல்வர்களுக்கு அது மற்றொரு செல்வம் போன்றதாகும் என்பதை அறியமுடிகிறது. பொறாமை கொண்டவனின் செல்வமானது அழிந்துவிடும் இதனை,

“அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்”[13]

என்று வள்ளுவர் எடுத்துரைக்கின்றார். பொறாமை என்று கூறப்படும் ஒப்பற்ற பாவி, ஒருவனுடைய செல்வத்தையும், கெடுத்துத் தீய வழியில் அவனைச் செலுத்திவிடும். அதனால் பொறாமைக் குணத்தை விட்டுவிட வேண்டும் என்பதை விளக்குகின்றார். பிறருக்குக் கொடுத்து உதவாதவனுடைய செல்வமானது ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தாற் போன்றதாகும் என்பதை வள்ளுவர்,

“நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்
நச்சு மரம்பழுத் தற்று”[14]

எனும் குறட்பாவின் மூலம் உணர்த்துகின்றார். ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தால் அது யாருக்கும் பயன்படாமல் போய்விடும். அதைப் போன்று பிறருக்குக் கொடுக்காதவனுடைய செல்வமானது அழிந்து போய்விடும் என்று

விளக்குகின்றார். செல்வத்துடன் வாழ்பவர்கள் வறுமையால் வருந்துபவர்களுக்கு கொடுத்து வாழவேண்டும் என்பதை நல்லாதனார்,

“அலந்தார்க்கொன் றீந்த புகழும் துளங்கினும்
தன்குடிமை குன்றாத் தகைமையும் - அன்போடி
நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றும்
கேள்வியுள் எல்லாந் தலை”[15]

எனத் திரிகடுகப் பாடலின் வழி விளக்குகின்றார். செல்வம் குறைந்தாலும் குடிப்பெருமை குன்றாமல் வாழ வேண்டும். செல்வம் குறைந்தாலும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் எனும் கருத்தை அறியமுடிகின்றது. செல்வம் என்பது நிலைத்து நிற்பன போலத் தோன்றி பின் அழிந்து கெட்டுவிடும். இதனை,

“கிளைஞர்க்கு உதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கண் போற்றான் உழவும் - இளையனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்”[16]

என்று நல்லாதனார் எடுத்துரைக்கின்றார். சுற்றத்தாருக்கு உதவாதவனுடைய செல்வமானது நிலைத்து நிற்பன போலத் தோன்றி பின் கெட்டு அழிந்து போய்விடும் என்பதை அறியமுடிகிறது. பொருள்களின் நிலையாமையை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை நல்லாதனார்,

“இல்லார்க்கொன் றீயும் உடைமையும் இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள”[17]

எனும் திரிகடுகப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். அறம் உணர்ந்த சான்றோர்கள் உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து நடக்கும் நெறி கொண்டவர்கள் எனச் சுட்டுகின்றார். வறுமையில் வாழ்கின்றவர்களுக்குக் கொடுக்கின்ற செல்வமானது அறச்செயல்கள் செய்வதைப் போன்றதாகும் என எடுத்துரைக்கின்றார். ஒழுக்க நெறியிலிருந்து தவறாதவர்களுடைய செல்வம் மட்டுமே நிலைத்திருக்கும் என்பதை வண்கயத்தூர் முள்ளியார்,

“பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்”[18]

என்ற ஆசாரக்கோவைப் பாடலின் வழி விளக்குகின்றார். ஒழுக்கம் உடையவர்கள் நற்குடிப்பிறப்பு, நீண்ட வாழ்நாள், செல்வம், அழகு, நிலத்திற்கு உரிமை,சொல்வன்மை, கல்வி, நோயின்மை என்று கூறப்பட்ட எட்டையும் அடைவார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றார்.செல்வத்துடன் வாழ்பவர்கள் பழியான செயல்களைச் செய்யக்கூடாது. அப்படிச் செய்யாதவர்கள் உலக இன்பத்தை அடைவார்கள். இதனை,

“பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே ஆகும் - அருளுடையான்
செய்யான் பழிபாவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக்கு உய்த்து”[19]

என்று காரியாசான் சிறுபஞ்சமூலம் பாடலில் உணர்த்துகின்றார். செல்வம் உடையவர்களிடத்தில் உலக இன்பமும், அறச்செயல், உயிர்களிடத்து அருளைச் செலுத்துபவர்களிடமும் உண்டாகும் என்பதை

அறியமுடிகின்றது.வளமான செல்வ வாழ்க்கையை விட உண்மை பேசும் வாழ்க்கையே சிறந்தது என்பதை மதுரைக்கூடலூர்கிழார்,

"வண்மையில் சிறந்தன்று வாய்மை யுடைமை"[20]

என முதுமொழிக்காஞ்சிப் பாடல் மூலம் விளக்குகின்றார். செல்வம் உடையவர்களாக இருப்பதைவிட உண்மை பேசுகின்றவர்களாக வாழவேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார். செல்வம் குறையாமல் இருக்க முயற்சி செய்ய வேண்டும். இதனை,

"முற்பெரு கலிற்பின் சிறுகாமை சிறந்தன்று"[21]

என்று மதுரைக்கூடலூர்கிழார் எடுத்துரைக்கின்றார். செல்வம் முற்காலத்தில் பெருகி பின்பு அடியோடு அழிதலைக் காட்டிலும் பிற்காலத்தில் உள்ள செல்வமானது குறையாமல் அப்படியே நிலைத்து நிற்க வேண்டும். அதுவே சிறந்ததாகும். செல்வம் குறையாமல் இருப்பதற்கு முயற்சி செய்து வாழ வேண்டும் என விளக்குகின்றார். பழிச்செயல்கள் செய்பவர்களின் செல்வமானது அவர்களிடம் இருந்தும் இல்லாதது போன்றதாகும் என்பதை,

"பழியோர் செல்வம் வறுமையில் துவ்வாது"[22]

என மதுரைக்கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சிப் பாடலின் வழி உணர்த்துகின்றார். பழியோடு வாழ்கின்றவர்கள் செல்வம் இருந்தும் வறுமையில் வாழ்கின்றவர்கள்தான் அவர்களிடம் செல்வம் இருந்தும் பயன் ஒன்றுமில்லை. செல்வம் அழியாமல் இருப்பதற்கு பழிச் செயல்களைச் செய்யக்கூடாது என்பதை அறியமுடிகின்றது. செல்வம் இருந்தும் கொடுக்காது மறைத்தல் பெருங்கொடுமையாகும் என்பதனை மதுரைக்கூடலூர்கிழார்,

"இயைவது கரத்தலில் கொடுமை இல்லை" [23]

என முதுமொழிக்காஞ்சிப் பாடலின் மூலம் உணர்த்துகின்றார். மற்றவர்களுக்கு உதவக் கூடிய பொருள் நம்மிடம் இருந்தால் அதை அவர்களுக்குக் கொடுக்காமல் மறைத்து வைத்தால் அதைவிட வேறு ஒரு கொடுமை எதுவும் இல்லை என்கிறார். புகழைவிட மிகப் பெரியதொரு செல்வம் இவ்வுலகத்தில் வேறு ஒன்றுமில்லை. இதனை,

"இசையில் பெரியதோர் எச்சம் இல்லை" [24]

என்று மதுரைக்கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சியில் விளக்குகின்றார்.எல்லா பொருள்களைவிட, புகழே சிறந்தது என்பதை உணர்த்துகின்றார். அதிகமான செல்வமுடையவன் தன்னிடத்தில் கோபம்வராமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதனை,

"பெருஞ்சீர் ஒன்றன் வெகுளியின் மைபொய்" [25]

என மதுரைக்கூடலூர்கிழார் விளக்குகின்றார். செல்வமுடையவன் தன்னிடத்தில் கோபம் வராமல் பாதுகாத்துக் கொள்வது மிகவும் அரிதாகும். அவன் கோபம் கொண்டால் அவனுடைய செல்வம் அழிந்துவிடும். அதனால் கோபம் கொள்ளக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.செல்வத்தின் மீது அதிக ஆசைவைக்கக் கூடாது. இதனை,

"குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான் - இறுகானாய்
ஈடற் றவர்க்கீவான் ஆயின நெறிநூல்கள்
பாடிறப்ப பன்னுமிடத்து" [26]

என்று கணிமேதாவியார் ஏலாதிப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். செல்வத்தின் மீதுள்ள பற்றினால் பொருளை இறுக்கமாகப் பிடித்து வைக்கக் கூடாது. பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும். அப்படிச் செய்கின்றவர்களுக்கு அறநெறியைச் சொல்லும் நூல்கள் தேவை இல்லை என்கிறார். ஒரு நாளும் செல்வம் நம்மை விட்டு நீங்காமல் இருக்குமாறு செல்வத்தைத் திரட்டுதல் வேண்டும் என்பதனை பொய்கையார்,

> “உடைமையறாது ஈட்டல் உறுதுணையாம் யாண்டும்
> உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
> உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்கால் சுற்றம்
> உடையவரும் வேறு படும்” [27]

எனும் இன்னிலைப் பாடல் மூலம் எடுத்துரைக்கின்றார். பொருள் செல்வம் உடையவராகச் சென்றால் ஊரில் உள்ளவர் எல்லாம் உற்ற உறவினராக இருப்பர். அச்செல்வம் எல்லா இடத்திலும் உற்ற துணையாக விளங்கும். பொருள் செல்வமாகிய ஊன்றுகோல் இல்லாதுச் சென்றால் உற்ற உறவினரும் வேறுபட்டு அயலாராகவே இருப்பார்கள். அதனால் செல்வம் நம்மைவிட்டு நீங்காமல் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதைச் சுட்டுகின்றார். செல்வம் அழிந்த பின்புதான் உறவினர்களின் குணங்கள் தெரியும் என்பதனை விளம்பிநாகனார்,

> “மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்து
> ஏறிய பின்னறிப மாநலம் மாசறச்
> சுட்டறிப பொன்னின் நலங்காண்பார் கெட்டறிப
> கேளிரான் ஆய பயன்” [28]

என்று நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். மக்கள் செல்வம் கெட்டு வறுமையுறும் போதுதான் அவர் உறவினரால் அவர்க்கு உண்டாகும்

பயன் நன்கு அறியமுடியும் என எடுத்துரைக்கின்றார். செல்வம் என்பது திருமகள் கூடினாள் கூடும். அவள் நீங்கினாள் செல்வமும் நீங்கிவிடும். இதனை,

“பிறக்குங்கால் பேரெனவும் பேரா இறக்குங்கால்
நில்லெனவும் நில்லா உயிரெனைத்தும் - நல்லாள்
உடம்படின் தானே பெருகுங் - கெடும்பொழுதில்
கண்டனவுங் காணாக் கெடும்”[29]

என விளம்பிநாகனார் எடுத்துரைக்கின்றார். உயிர்கள் பிறக்கும் போது நீங்கிவிடு என்றால் நீங்காது, இறக்கும் போது நில் என்றால் நிற்காது அதைப் போன்றதுதான் செல்வம் என்பதும் செல்வத்தை நம்மிடம் நிலைத்து வைக்கமுடியாது என்பதை அறியமுடிகிறது.நாணம் என்பது நீங்கினால் செல்வமும் நீங்கிவிடும் என்பதை விளம்பிநாகனார்,

“பொறிகெடும் நாணற்ற போழ்தே – நெறிபட்ட
ஐவரால் தானே வினைகெடும் - பொய்யா
நலம்கெடும் நீரற்ற பைங்கூழ் - நலமாறின்
நண்பினார் நண்பு கெடும்”[30]

என்று நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் விளக்குகின்றார். நீரற்றுப் போனால் பயிர்களின் விளைச்சல் கெட்டுவிடும். அதைப் போன்றுதான் நாணம் இல்லாதவனிடம் உள்ள செல்வம் கெட்டு அழிந்துவிடும். செல்வம் நிலைத்து இருக்க வேண்டும் என்றால் நாணத்துடன் இருக்க வேண்டும் என்கிறார்.செல்வமுடையவனுக்கு விரும்பிய பொருள்கிடைக்கும். திருமகள் கூடினால் செல்வம் பெருகும், அவள் நீங்கினாள் செல்வம் அழியும். இதனை,

"கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழாம் நீருண்டேல் உண்டாந் திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறின் உண்டாகும் மற்றவள்
துன்புறுவாள் ஆகிற் கெடும்" [31]

என விளம்பிநாகனார் கூறுகின்றார். நீருண்டானால் விதைகள் முளை கிளம்பும். அதுபோன்றே செல்வம் உடையவர்களுக்கு விரும்பியப் பொருள்கள் கிடைக்கும் என்கிறார்.

"கைத்தில்லார் நல்லவர் கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரின் நல்லா வறியவர் - பைத்தெழுந்து
வைதாரின் நல்லர் பொறுப்பவர் - செய்தாரின்
நல்லர் சிதையா தவர்" [32]

என்று நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் விளக்குகின்றார். செல்வத்தைச் சேர்த்து வைத்து இழப்பாரினும் வறியவர் மிக நல்லவர் என்பதைச் சுட்டுகின்றார். நற்குடியில் பிறவாரிடத்து உள்ள பொருள் யாருக்கும் பயன்படுவது இல்லை. இதனை,

"தொடி முன்கை நல்லாய் அத் தொக்க பொருளைக்
குடிமகன்அல்லான்கை வைத்தல் - கடிநெய்தல்
வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப
மூரியைத் தீற்றிய புல்" [33]

என முன்றுறையரையனார் உணர்த்துகின்றார். நல்ல குடியில் பிறக்காதவன் எவ்வளவுதான் முயற்சி செய்து செல்வத்தைச் சேர்த்தாலும் அது மற்றவர்களுக்கு பயன்படாமல் போய்விடும் என்பதை அறியமுடிகின்றது. தீயசெயல்களால் உண்டாகிய செல்வம் பெருகுவது போல் தோன்றி பின்பு அழிந்துவிடும் என்பதனை முன்றுறையரையனார்,

"அல்லது செய்வார் அரும்பொருள் ஆக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ ஒல்லொலிநீர்
பாய்வதே போலுப துறைவ! கேள் தீயன
ஆவதே போன்று கெடும்" [34]

எனும் பழமொழிநானூறுப் பாடல் மூலம் விளக்குகின்றார். நற்குடியில் பிறந்தவர்கள் செல்வத்தின் மீது ஆசை கொள்ளமாட்டார்கள். தீயவர்களே செல்வத்தின் மீது ஆசை கொள்வார்கள். புதுவெள்ளம் வந்து பழைய வெள்ளத்தைக் கொண்டு போனது போல, தீயவரின் செல்வம் வருவது போன்று தோன்றி வந்த அளவிலேயே அழிந்துவிடும் என்கிறார். அறிவிலார் பெற்ற செல்வம் அவர்களுக்கே துன்பத்தினை விளைவிக்கும். இதனை,

"தொன்மையின் மாண்ட துணிவொன்றும் இல்லாதார்
நன்மையின் மாண்ட பொருள்பெறுதல் இன்னொலிநீர்
கல்மேல் இலங்கு மலைநாட மாக்காய்த்துத்
தன்மேல் குணில்கொள்ளு மாறு" [35]

என்று முன்றுறையரையனார் எடுத்துரைக்கின்றார். மாமரமானது காய்த்து அதனால் தன்மேல் பிறரெறியும் கல்லை ஏற்றுக்கொள்ளுதல் போன்று அறிவிலார் பெற்ற செல்வத்தால் அது அவர்களுக்கே துன்பத்தைத் தரும் என்பதை விளக்குகின்றார். நிலையாமை என்பது செல்வத்திற்கு மட்டும் அல்லாமல் மக்களுக்கும் வருவதாகும் என்பதை,

"இன்றி யமையா இருமுது மக்களைப்
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்பவோ
ஒன்றும் வகையான் அறஞ்செய்க ஊர்ந்துருளின்
குன்று வழியடுப்ப தில்" [36]

என முன்றுறையரையனார் பழமொழிநானூறுப் பாடல் மூலம் விளக்குகின்றார். நிலையாமையை அறிந்துகொண்டு மக்கள் அறத்தைச் செய்ய வேண்டும். அறம் ஒன்று மட்டுமே அழியாதது. அதனால் எல்லாப் பற்றையும் விட்டுவிட்டு அறத்தைச் செய்யவேண்டும் என்பதைச் சுட்டுகின்றார். நிலையாமை என்பது எல்லாவற்றிற்கும் பொருந்துவதாகும். அறம் மட்டுமே என்றும் நிலையானது என்பதை அறியமுடிகின்றது. மற்றவர்களுக்குக் கொடுத்து உதவாதவனுடைய செல்வமானது அவனுக்குத் துன்பத்தைத் தரும் என்பதனை கபிலர்,

"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு"[37]

என்று இன்னாநாற்பதுப் பாடல் வழி உணர்த்துகின்றார். செல்வத்தை அறவழியில் பயன்படுத்தாமல் புதைத்து வைக்கின்றவனுக்கு அச்செல்வத்தால் துன்பம் ஏற்படும் என்பதைச் சுட்டுகின்றார். பொருள்களையும் செல்வத்தையும் வீணே அழிக்காமல் பாதுகாத்து வைத்து வாழ்தல் நன்று என்பதை ஔவையார்,

"பொருள்தனைப் போற்றி வாழ்"[38]

என ஆத்திசூடிப் பாடல் மூலம் விளக்குகின்றார். செல்வத்தை வீணே அழிக்காமல் அறவழியில் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றார்.

அறநூல்கள் மனிதனிடத்துப் பொறாமை இருக்கக் கூடாது என வலியுறுத்துகின்றன. எவன் ஒருவன் பொறாமை கொள்கிறானோ அவனது செல்வத்திற்கு அழிவு வந்துவிடும். இதனை,

"ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு"[39]

என்று ஔவையார் கொன்றை வேந்தன் பாடல் வழி எடுத்துரைக்கின்றார். பொறாமைக் குணத்துடன் பேசுவது செல்வத்திற்கு தீமையாகும் என்பதை அறியமுடிகின்றது. உழுது பயிர் செய்தலால் வருகின்ற செல்வமானது அழியாது என்பதனை ஔவையார்,

"மேழிச் செல்வம் கோழை படாது"[40]

எனும் பாடல் மூலம் உணர்த்துகின்றார். உழுது பயிர் செய்து பெற்ற செல்வம் ஒருபோதும் குறையாது. வேளாண்மையால் வரும் செல்வம் சிறப்புடையதாக இருக்கும் எனக் கூறுகின்றார். பெரிய செல்வந்தர்களாக இருந்தாலும் வரவுக்குத் தகுந்தவாறு செலவுகள் செய்ய வேண்டும். இதனை,

"வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண்"[41]

என்று ஔவையார் கொன்றைவேந்தன் பாடலில் உணர்த்துகின்றார். வரவுக்குத் தகுந்த செலவு செய்தல் வேண்டும் எனச் சுட்டிக்காட்டுகின்றார். பொருளைத் தேடி அனுபவிக்காமல் மண்ணில் புதைத்து வைத்தல் கூடாது என்பதனை உலகநாதனார்,

"தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்"[42]

என உலகநீதிப் பாடல் மூலம் விளக்குகின்றார். மனிதன் தேடிவைத்த செல்வத்தை அறவழியில் பயன்படுத்த வேண்டும். அதை மண்ணில் மறைத்து வைக்கக் கூடாது. அப்படிச் செய்வதால் அந்த பொருள் யாருக்கும் பயன்படாமல் அழிந்துவிடும் எனக் கூறுகின்றார்.

செல்வம் உள்ளவர்க்கு அழகு அவருடைய உறவினர் வறுமையில் வாடும் பொழுது உதவி புரிந்து காப்பாற்ற வேண்டும். இதனை,

"செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல்"[43]

என்று அதிவீரராமபாண்டியன் வெற்றிவேற்கைப் பாடல்வழி எடுத்துரைக்கின்றார். செல்வம் உடையவர்கள் அவர்களது உறவினர்களுக்குக் கொடுத்து உதவி வாழ வேண்டும். அவ்வாறு அவர்கள் வாழ்ந்தால் அதுவே அவர்களுக்குச் சிறப்பைத்தரும் என்கிறார். மலைபோன்ற செல்வம் உள்ளோர் ஒரே நாளில் செல்வம் அழிந்து வறியவர் ஆனாலும் ஆவர் என்பதை,

"குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர்"[44]

என வெற்றிவேற்கைப் பாடல் மூலம் அதிவீரராமபாண்டியன் விளக்குகின்றார். மலையளவு பெரும் பொருள் பெற்றிருப்பினும் பெற்ற அப்பொழுதே அதனை இழந்து வறியவர் ஆனாலும் ஆவர். வறுமை என்பது யாருக்கு வேண்டுமானாலும் வரக்கூடியது. ஆதலால் செல்வத்தின் பெருமைமட்டுமல்லாது வறுமையின் வருத்தமும் தெரிந்து வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார். செல்வம் என்றும் நிலையில்லாதது என்பதனை,

"சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்"[45]

என்று அதிவீரராமபாண்டியன் உணர்த்துகின்றார். சீரும் சிறப்புமாகச் செல்வத்தோடு வாழ்ந்தவர்கள் கூட வறுமை அடைந்து தர்ம சத்திரத்திற்குப் போக நேரிடும். அதனால் செல்வம் என்றுமே நிலையில்லாதது என்பதை அறியமுடிகிறது. உறவினரும், பொருளும், அழகும், உயர்குலமும் நிலையில்லாதவை. இதனை,

"மருவு இனிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும் உயர்குலமும் எல்லாம் - திருமடந்தை
ஆம்போது அவளோடும் ஆகும் அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம்"[46]

என ஔவையார் மூதுரைப் பாடல் மூலம் விளக்குகின்றார். செல்வம் என்பது சீதேவி வந்து கூடும் பொழுது அவளுடனே வந்து கூடும் அவள் நீங்கிப் போகும் பொழுது அவளுடனே செல்வம், அழகு, உறவினர், உயர்குலம் இவை அனைத்தும் நீங்கிப் போய்விடும் என்பதை எடுத்துரைக்கின்றார். அளவற்ற முயற்சியால் எவ்வளவு பொருள் தேடிய போதிலும் நல்ல காலம் கூடி வந்தால் மட்டுமே அப்பொருள் நிலைத்து நிற்கும் என்பதனை ஔவையார்,

"ஈட்டும் பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும்ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்"[47]

என்று நல்வழிப் பாடலில் உணர்த்துகின்றார். காலம் கூடிவந்தால் மட்டுமே செல்வம் நிலைத்திருக்கும். அக்காலம் நீங்கினால் செல்வமும் நீங்கி விடும் என்பதை விளக்குகின்றார்.வரவுக்கு அதிகமாகச் செலவு செய்பவன் பழிபாவங்களை அடைவான். அதனால் வரவுக்குத் தகுந்த செலவு செய்ய வேண்டும். இதனை,

"ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து மதிகெட்டுப் - போனதிசை

எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"[48]

என ஔவையார் எடுத்துரைக்கின்றார். தனக்குக் கிடைத்த பொருளுக்கு மேல் அதிகமாகச் செலவு செய்பவன் மானம் அழிந்து, அறிவு இழந்து, பாவம் உடையவனாவான் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். செல்வம் உள்ள பொழுதே தன்னிடம் வந்து இரப்பவர்களுக்குக் கொடுத்து வாழவேண்டும் என்பதனை ஔவையார்,

> "ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
> மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்
> தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
> உண்ணீர்மை வீறும் உயர்ந்து"[49]

எனும் நல்வழிப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். செல்வம் என்பது ஆற்று வெள்ளத்தின் மேடு பள்ளம் போன்றது. அப்படிப்பட்ட செல்வம் இருக்கும் பொழுதே தன்னிடம் இரந்து வருபவர்களுக்குக் கொடுத்து உதவுவதே சிறந்த அறமாகும் என்று அறிவுறுத்துகின்றார்.

உழைத்துத் தேடியப் பணத்தை உண்டு வாழாமல் பிறருக்கும் கொடுக்காமல் மண்ணில் புதைத்து வைத்துத் திரியும் மனிதர்களே அதனால் எந்தஒரு பயனும் இல்லை என்பதை ஔவையார்,

> "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
> கேடு கெட்ட மானிடரே கேளுங்கள் கூடுவிட்டு இங்கு
> ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
> பாவிகாள் அந்தப் பணம்"[50]

என்று எடுத்துரைக்கிறார். செல்வத்தை அறவழியில் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் மண்ணில் புதைத்து வைத்தால் இறந்தபின் அதை யாரும்

அனுபவிக்காமல் அழிந்துவிடும் என்கிறார். பெருஞ்செல்வராயினும் செல்வச் செருக்கு இருக்கக்கூடாது. இதனை,

“தொலையாப்பெரும் செல்வத்தோற்றத்தோம் என்று
தலையாயவர் செருக்குச் சார்தல் இலையால்
இரைக்கும் வண்டுஊதும் மலர் ஈர்ங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு”[51]

எனச் சிவப்பிரகாசசுவாமிகள் நன்னெறிப் பாடல் வழி விளக்குகின்றார். ஒரு காலத்தில் மகாமேருமலைக்கும் வளைவு வந்தது. அதனால் எவ்வளவு பெரிய செல்வத்திற்கும் அழிவு வரும் என்று அறிந்து அடங்குவோரே அறிவுடையோர் ஆவர் என்கிறார்.செல்வத்தின் மீது பற்றுக்கூடாது என்பதனை,

“இன்னல் தரும்பொருளை ஈட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே – அன்ன
தழித்தலுந் துன்பமேயந்தோ பிறர்பால்
இழத்தலுந் துன்பமே யாம்”[52]

என்று நீதிவெண்பாப் பாடல் விளக்குகின்றது. துன்பத்தைத் தரக்கூடிய செல்வத்தைச் சேர்த்தலும், அச்செல்வத்தைக் காப்பாற்றுதலும், அப்படிப்பட்ட பொருளைச் செலவழித்தலும் துன்பமேயாகும் என்கிறது. இக்கருத்தைப் போன்றே வள்ளுவரும்,

“ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி”[53]

எனும் குறட்பா மூலம் உணர்த்துகின்றார். பிறருக்குக் கொடுக்கும் அளவு அறிந்து பொருளைக் கொடுக்க வேண்டும். அதுவே செல்வத்திற்குச் சிறப்பாகும்

என்கிறார். நிலையில்லாத செல்வத்தின் மீதுள்ள பற்றை விட்டு நிலைபெற்ற அறத்தினைச் செய்து வாழவேண்டும். இதனை,

"இன்றுளார் இன்றேயும் மாய்வர் அவருடைமை
அன்றே பிறருடைமை யாயிருக்கும் - நின்ற
கருமத்த ரல்லாத கூற்றின்கீழ் வாழ்வார்
தருமந் தலைநிற்றல் நன்று"[54]

என்று அறநெறிச்சாரப் பாடல் உணர்த்துகின்றது. இன்றைக்கு உயிருடன் இருப்பவர் இன்றே இறந்தாலும் அவர் செல்வம் அவர் இறந்த அப்பொழுதே பிறருடையதாகும். அதனால் மக்கள் நிலைபெற்ற அறச்செயல்களைச் செய்து வாழ வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. தலைமக்களின் செல்வமானது பலருக்கும் பயன்படும் என்பதனை குமரகுருபரர்,

"பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே ஏனையோர் செல்வம் - கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்"[55]

என நீதிநெறிவிளக்கப் பாடல் மூலம் எடுத்துரைக்கிறார். மக்கள் தம்மிடம் உள்ள பொருளை மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ வேண்டும். அப்படி வாழ்கின்றவர்களே தலைமக்களாவார்கள் என்பதைக் கூறுகின்றார். ஒவ்வருவரும் தாமே வருந்தி உழைத்துப் பொருள் தேட வேண்டும். அந்தப் பொருளால் தாமும் இன்புற வேண்டும், பிறருக்கும் உதவ வேண்டும். இக்கருத்தை,

"உள்ளது சிதைப்போர் உளர்எனப் படாஅர்
இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவுஎனச்
சொல்லிய வன்மை தெரியக் காட்டிச்

சென்றனர்" [56]

என்று குறுந்தொகைப் பாடல் விளக்குகின்றது. முன்னோர் தேடி வைத்திருக்கும் செல்வத்தைச் செலவழித்துக் கொண்டிருப்போர் செல்வம் உள்ளவர் என்று சொல்லப்படமாட்டார். அவர் வறுமைக்கு ஆளாவார். வறியவர்களின் இல்வாழ்வு பிச்சையெடுத்து வாழ்வதைக் காட்டிலும் இழிவான வாழ்வாகும். அதனால் தானே முயற்சி செய்து உழைத்து செல்வத்தைச் சேர்க்க வேண்டும். அதை தானும் அனுபவித்து மற்றவர்களுக்கும் கொடுத்து உதவி வாழவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

பொருளிலே ஆசைகொண்டவர்கள் வேறு எதனாலும் இன்பம் அடையமாட்டார்கள். செல்வத்தைச் சேர்த்துக் குவித்து வைத்துப் பார்ப்பதிலேயே ஆனந்தம் அடைவார்கள். பொருள் சேர்க்க அவர்கள் அல்லும் பகலும் அலைந்து திரிவார்கள். பொருளாசைப் பிடித்தவர்களின் வாழ்க்கையை,

"இளமை பாரார் வளம்நசைஇச் சென்றோர்" [57]

எனும் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகின்றது.செல்வத்திலே ஆசைகொண்டு அதைத் தேடப் புறப்பட்டுப் போனவர்கள் எல்லா இன்பங்களையும் அனுபவிக்கக் கூடிய இளமைப் பருவம் வீணாகக் கழிகின்றதே என்று கூடக் கவலைப்படமாட்டார்கள் என்பதைக் கூறுகின்றது. செல்வம் நிலையுள்ளது அழியாதது என்று நம்பி அதைச் சேர்ப்பதிலே காலங்கடத்துவது அறியாமை. செல்வம் நிலையற்றது. வரும், போகும் ஆதலால் செல்வமுள்ள போதே நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை,

"மரீஇத்தாங் கொண்டாரைக் கொண்டக்காற் போலாது
பிரியுங்காற் பிறரெள்ளப் பீடின்றிப் புறமாறுந் திரு" [58]

என்றக் கலித்தொகைப் பாடல் விளக்குகின்றது. செல்வமானது தான் சேர்ந்தவரைப் பெருமைக்கு ஆளாக்கும். அவரை விட்டுப்பிரியும் போது மற்றவர்கள் அவரைப் பார்த்து ஏழை வறியவர் என்று பேசும்படி பெருமையின்றி வேறிடத்திற்குப் போய்விடும் என்கிறது. பொருள் தனக்கு உரியவர் இன்னார்தான் என்று கருதி ஒருவரிடத்திலே நிலைத்திராது. நல்வினை உடையவர்களிடம் எல்லாம் மாறிமாறிச் சென்று தங்கும். இதனை,

> " கிழவ ரின்னோ ரென்னாது பொருடான்
>
> பழவினை மருங்கிற் பெயர்புபெயர் புறையும்"[59]

என்றுக் கலித்தொகைப் பாடல் உணர்த்துகின்றது. முயற்சி மட்டும் செல்வத்திற்குக் காரணம் அன்று பழவினையும் செல்வத்திற்குக் காரணமாகும் என்பதைக் காட்டுகின்றது. நேர்மையான வழியிலே பொருள்சேர்க்க வேண்டும். பொருளாசை கொண்டு அறமற்ற முறையிலே செல்வம் சேர்ப்பது தவறு,

> "செம்மையி னிகந்தொரீஇப் பொருள் செய்வாக் கப்பொரு
>
> ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ"[60]

எனக் கலித்தொகைப் பாடல் எடுத்துரைக்கின்றது. ஒழுங்கு தவறிய நெறியிலே பொருள் சேர்ப்பவரிடம் அப்பொருள் நிலைத்திராது. இம்மையிலும், மறுமையிலும் பகையாகி நின்று துன்பம் விளைவிக்கும். இதே போன்று,

> "கிளையழிய வாழ்பவன் ஆக்கம்போல்"[61]

என்பதன் மூலம் சுற்றத்தாரைப்பேணாதான் செல்வம் நிலைக்காது என்று கலித்தொகைப் பாடல் உணர்த்துகின்றது. ஒருவர்க்குச் செல்வமுள்ள காலத்தில் அவருடைய உதவி பெற்று வாழ்வதும், அவர் செல்வத்தை இழந்து வறுமைக்கு ஆளானபோது அவரைவிட்டுப் பிரிதலும் நன்றி கெட்ட தன்மை என்பதை,

"நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையிற் பற்றுவிட் டொரூஉம்
நயனின் மாக்கள்" [62]

எனும் அகநானூறுப் பாடல் மூலம் அறியலாம். செல்வம் நிறைந்திருக்கும் காலத்தில் நட்பு செய்வர். செல்வம் குறைந்துவிட்டால் செல்வம் நிறைந்திருக்கும் வேறு மனிதரைத்தேடும் பொருட்டுப்பிரிவர். செல்வம் குறைந்தவர்களால் தனக்குப் பயனில்லை என்று கருதி அவருடைய பழைய தொடர்பை விட்டுவிடுவர். இவர்கள் நன்றியறிவற்ற விலங்குகளாவார்கள் என்றுச் சுட்டிக்காட்டுகின்றது. செல்வம், இளமை, யாக்கை என்ற இவை மூன்றும் நிலையில்லாதவை என்பதனைச் சீத்தலைச்சாத்தனார்,

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க அறமே விழுத்துணை யாவது" [63]

என மணிமேகலைப் பாடல்வழி விளக்குகின்றார். இளமை, யாக்கை, வளமுடைய சிறந்த பொருளும் நிலையில்லாதது. எல்லாவற்றிலும் மேம்பட்ட அறமே சிறந்த துணையாகும் என்கிறார். இதே போன்று குண்டலகேசியிலும்,

"யாக்கை பொருளிளமை நில்லா" [64]

என்று நிலையாமை பற்றி உணர்த்துகின்றது. யாக்கை, பொருள், இளமை என்பவை நிலையில்லாதத் தன்மை கொண்டது என்கிறது. செல்வம் நிலையற்றது என்பதனை,

"அன்னோர் செல்வமு மன்னி நில்லா
தின்னு மற்றதன் பண்பே அதனால்

நிச்சமு மொழுக்க முட்டிலை பரிசில்
நச்சுவர நிரப்ப லோம்புமதி அச்சுவரப்
பாறிறை கொண்ட பயந்தலை மாறுதகக்
கள்ளி போகிய களரி மருங்கின்
வெள்ளி னிறுத்த பின்றைக் கள்ளொடு
புல்லகத் திட்ட சில்லவிழ் வல்சி
புலைய னேவப் புன்மே லமர்ந்துண்
டழன்வாய்ப் புக்க பின்னும்
பலர்வாய்த் திராஅர் பகுத்துண் டோரே”[65]

எனும் புறநானூறுப் பாடல் விளக்குகின்றது. செல்வம் நிலையில்லாதது என்பதை அறிந்து மற்றவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும். இறந்த பின்பு நம்முடன் எந்த பொருள்களும் வரப்போவதில்லை என்பதனை அறிந்து மற்றவர்களுக்குக் கொடுத்திடவேண்டும் என்பதைச் சுட்டுகின்றது. உடலுடன் ஒன்றாய்ப் பிறந்தது உயிர் என்றாலும் உயிர் போகும் போது உடல் அழிந்துவிடும் இது போன்றே செல்வம் என்பது அழிந்துவிடும். இதனை,

“தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போமஉடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே”[66]

என்று திருமூலர் திருமந்திரப் பாடலில் உணர்த்துகின்றார். செல்வம் என்றுமே நிலைத்து நிற்கப் போவது இல்லை. அதனால் அவற்றைத் தெரிந்துகொண்டு செல்வத்தின்மீது வைத்துள்ளப் பற்றை நீக்கி விடவேண்டும் என்கிறார். பரம்பரைச் செல்வமும், தாமே முயற்சி செய்து ஈட்டிய செல்வமும் அழியக்கூடியவைகள். அதனால் செல்வம் உள்ள போதே அறவழியில்

செலவழிக்க வேண்டும். மனிதன் இறந்தபின்பு அவனுடன் வரக்கூடியது அவன் செய்த அறங்களே என்பதை அற இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

**இளமை நிலையாமை**

நிலையாமையுள் இளமையும் ஒன்று. அத்தகைய இளமை நிலையாமை பற்றி நாலடியார்,

“நட்புநார் அற்றன நல்லாரும் அஃகினார்
அற்புத் தளையும் அவிழ்ந்தன – உட்காணாய்
வாழ்தலின் ஊதியம் என்னுண்டாம் வந்ததே
ஆழ்கலத் தன்ன கலி” [67]

எனக் கூறுகின்றது. இளமை நிலையானது என்று எண்ணி இளமைக் காலத்தில் வாழ்வதனால் கிடைக்கும் பயன் எதுவும் இல்லை. அவ்வின்பத்தால் பின்னால் நிகழும் துன்பமானது கடலில் மூழ்கும் மரக்கலம் போன்றது. எனவே இளமை நிலையற்றத் தன்மையுடையது என்பதை அறியமுடிகிறது. நாலடியார் இந்நிலைப் பற்றி,

“சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல்கழன்று பண்டம் பழிகாறும் - இல்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடரு மாறு” [68]

எனக் காட்டுகிறது. பேசும் சொற்களின் வலிமை குறைந்து, கோலை ஊன்றி, தளர்ந்த நடையை உடையவராய், பற்கள் எல்லாம் விழப்பெற்று, காண்பவரால் பழிக்கப்பட்டு அடையும் நிலையைச் சுட்டுகிறது. இக்கருத்தைப் போன்றே பட்டினத்தாரும்,

“வளமையுமாறி யிளமையுமாறி வன்பல் விழுந்திரு
கண்களிருண்டு வயது முதிர்ந்து நரைதிரைவந்து

வாதவிரோதகு ரோதமடைந்து

செங்கையினிலோர்த டியுமாகியே”[69]

என்றுக் கூறுகின்றார். மூப்புப் பருவம் வந்ததும் மனிதனது உடல் தோற்றம் மாறும். மனிதனது அழகு மாறுபட்டு பற்கள் விழுந்து, கண்களில் ஒளிகுன்றி, நரைமுடி வந்துவிடும், கையில் கோலூன்றி தளர்ந்து நடக்கின்ற நிலை ஏற்படும் என்கிறார். இதே போன்று நாலடியாரில்,

“தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா

வீழா இறக்கும் இவள்மாட்டும் - காழ்இலா

மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும் தன்கைக்கோல்

அம்மனைக்கோல் ஆகிய ஞான்று”[70]

எனும் பாடல்வழி அறியமுடிகின்றது. அழகுருவோடுத் திகழ்ந்த உடம்புக் கூனித் தலைநடுங்குகின்ற இரங்கத்தக்க மூப்புநிலையை அடையக் கண்டும் இளமையை ஒரு பொருட்டாக எண்ணாமல் அறச்செயல்களைச் செய்யவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## இளமையில் அறம் செய்ய வேண்டும்

மரணம் என்பது யாருக்கும் எப்பொழுது வேண்டுமானாலும் நிகழக்கூடிய ஒன்று. ஆனால் மனிதன் அதனை அறியாப்பொருட்டு முதுமையில்தான் மரணம் நிகழும் என்ற அறியாமையை நாலடியார்,

“மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது

கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்

முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்

நற்காய் உதிர்தலும் உண்டு”[71]

என எடுத்துரைக்கின்றது. இளமையில் பொருள் தன்னிடம் இருந்த போதும் அறம் செய்யாமல் முதுமையில் அறம் செய்யலாம் என்ற நிலையில் இருப்பவனை, காற்றடிப்பதனால் மரங்களில் உள்ள கனிகள் மட்டும் விழுவதில்லை. காய்களும் விழுவதுண்டு. ஆகவே முதுமையில் மரணம் வரும் என்று எண்ணாமல் இளமையிலேயே அறம் செய்தல் வேண்டும் என்கிறது. மனிதன் இறந்த பின்பு அவனுக்குத் துணையாக இருப்பது அவன் செய்த அறம் மட்டுமே. இதனை வள்ளுவரும்,

“அன்றுஅறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றுஅது
பொன்றும்கால் பொன்றாத் துணை” [72]

என்று உணர்த்துகின்றார். இளைஞராக உள்ளவர் பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணாமல் அறம் செய்ய வேண்டும். அதுவே உடல் அழியும் காலத்தில் அழியாத் துணையாகும் என்கிறார். இதே போன்று,

“நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு” [73]

என வள்ளுவர் உரைக்கின்றார். நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம். அதனால் இளமை நிலையில்லாதது. உடம்பில் உயிர் உள்ளபோதே அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார்.இளமைப்பருவம் நிலைபெறாது கழியும், பிணியும், மூப்பும் வந்து சேரும், செல்வமும், உடம்பின் வலிமையும் குன்றும் என்பதனைக் கணிமேதாவியார்,

“இளமை கழியும் பிணிமூப்பு இயையும்
வளமை வலியிவை வாடும் - உளநாளால்

பாடே புரியாது பால்போலும் சொல்லினாய்

வீடே புரிதல் விதி”[74]

என்று ஏலாதிப் பாடலில் எடுத்தியம்புகின்றார். முதுமைப் பருவத்தில் நோய்கள் வந்து சேரும். அதனால் இளமைப் பருவத்திலேயே நல்ல அறங்களைச் செய்ய வேண்டும் என்கிறார். இளமையைக் காட்டிலும் உடம்பு நோயில்லாது இருத்தல் மேலானது. இதனை,

“இளமையில் சிறந்தன்று மெய் பிணியின்மை”[75]

என்று மதுரைக்கூடலூர் கிழார் முதுமொழிக்காஞ்சியில் கூறுகின்றார். மனிதனது உடல்நிலை ஆரோக்கியமானதாக இருக்க வேண்டும் என்கிறார். இளமைப் பருவத்திலேயே நல்ல மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதனைக் காரியாசான்,

“வடிவு இளமை வாய்ந்த வனப்பு வணங்காக்

குடிகுலம் என்று ஐந்தும் குறித்து – முடியாத்

துளங்கா நிலைகாணார் தொக்கு ஈர்பசுவால்

இளங்கால் துறவா தவர்”[76]

எனச் சிறுபஞ்சமூலம் பாடல்வழி உரைக்கின்றார். உருவம், இளமைப்பருவம், அழகு, உயர்ந்த குடி, உயர்ந்தகுலம் என்று சொல்லப்பட்ட இவ்வைந்தும் விரைவில் நீங்கிவிடக் கூடியவை. எனவே இளமைப் பருவத்திலேயே துறவு மனப்பான்மையைப் பெற்றிருக்க வேண்டும். அப்படி பெறாதவர்கள் பாரத்தை இழுத்துச் செல்லுகின்ற எருதிற்குச் சமமாவார்கள் என்கிறார். உடம்பில் உயிர் உள்ளபோதே அறங்கள் செய்ய வேண்டும் என்பதைத் திருமூலர்,

“தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை

ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்

பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை

ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே" [77]

என்று திருமந்திரத்தில் எடுத்துரைக்கின்றார். முதுமைப் பருவத்தில் அறங்கள் செய்ய முடியாமல் போய்விடும் என்பதால் இளமைப் பருவத்தில் அறங்கள் பல செய்ய வேண்டும். மனிதனுக்கு அறங்கள் மட்டுமே துணையாக இருக்கக்கூடியது என்று திருமூலர் கூறுகின்றார். இதே போன்று அறநெறிச்சாரம்,

"மின்னு மிளமை உளதாம் எனமகிழ்ந்து

பின்னை யறிவெனென்றல் பேதைமை – தன்னைத்

துணித்தானும் தூங்கா தறஞ்செய்க கூற்றம்

அணித்தாய் வருதலு முண்டு" [78]

என எடுத்தியம்புகின்றது. எமன் இளமையிலேயே ஆயுளைக் கவர்ந்து செல்ல வருதலும் உண்டு. ஆதலால் இளமையிலேயே அறங்களைச் செய்யவேண்டும் என்கிறது.

## நிலையில்லாத அழகு

இளமைப் பருவத்தில் வரும் அழகு நிலையற்றது. இளமை நீங்கியதும் அழகும் மங்கிவிடும். இதனை,

"பனிபடு சோலைப் பயன்மர மெல்லாம்

கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை – நனிபெரிதும்

வேல்கண்ணன் என்றிவளை வெ.்.கன்மின் மற்றிவளும்

கோல்கண்ண ளாகும் குனிந்து" [79]

என்று நாலடியார் கூறுகின்றது. கனிகள் இல்லாத மரங்கள் வெறுமையாகத் தோன்றுவதுப் போல் இளமை நீங்கியதும் மனிதனது தோற்றப்பொழிவும் மங்கிவிடுகின்றது. இளமை என்பது முதுமை நிலையை அடையக்கூடியது. அதனால் இளமைப்பருவத்திலேயே அறங்கைச் செய்ய வேண்டும் என்று

எடுத்துரைக்கின்றது. உலகத்தில் இறக்காத உயிர்களும் இல்லை, கெடாத வலிமைகளும் இல்லை, முதுமை அடையாத இளமையும் இல்லை, குறையாத செல்வமும் இல்லை என்பதனை விளம்பிநாகனார்,

“சாவாத இல்லை பிறந்த உயிரெல்லாம்
தாவாத இல்லை வலிகளும் - மூவாது
இளமை யிசைந்தாரும் இல்லை – வளமையிற்
கேடு இன்றிச் சென்றாரும் இல்” [80]

என நான்மணிக்கடிகைப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். இளமைப் பருவம் நீங்கி முதுமைப் பருவம் அடையாத மனிதனும் இல்லை. ஆதலால் இளமை நீங்குவதற்கு முன்பு அறம் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். முதுமை வந்ததும் மனிதனது உடலில் மாற்றங்கள் தோன்றும். இதனை,

“பொய்த்தல் இறுவாய நட்புக்கள் மெய்த்தாக
மூத்தல் இறுவாய்த் திளைநலந் தூக்கில்
மிகுதி இறுவாய செல்வங்கள் தத்தம்
தகுதி இறுவாய்த் துயிர்” [81]

என்று விளம்பிநாகனார் நான்மணிக்கடிகைப் பாடல்வழி உணர்த்துகின்றார். வாழ்நாள் முடிந்ததும் உடலைவிட்டு உயிர் நீங்குவதுப் போல் முதுமைப் பருவம் வந்ததும் இளமைப்பருவத்தில் இருந்த அழகு மனிதனைவிட்டு நீங்கிவிடுகின்றன. இதே போன்று மணிமேகலையிலும்,

“தண்ணறல் வண்ணந் திரிந்துவேறாகி
வெண்மண லாகிய கூந்தல் காணாய்
பிறைநுதல் வண்ணங் காணா யோநீ
நரைமையிற் றிரைதோற் றகையின் றாயது” [82]

எனச் சீத்தலைச்சாத்தனார் கூறுகின்றார். முதுமைப் பருவத்தில் உடலில் பல மாற்றங்கள் ஏற்படுவதை எடுத்துரைக்கின்றார். முதுமைப் பருவத்தில் அணிகின்ற அணிகலன்கள் அழகினைத் தராது என்பதனை மதுரைக்கூடலூர்கிழார்,

"முதிர்வுடை யோன்மேனி யணிநல் கூர்ந்தன்று" [83]

என்று முதுமொழிக்காஞ்சிப் பாடல் மூலம் உணர்த்துகின்றார். செயற்கையான அழகுகள் இளமைப் பருவத்திற்கு மட்டுமே அழகைத் தரும். முதுமைப் பருவத்திற்கு அழகைத் தராது என்பதை எடுத்துரைகின்றார்.

**இளமை நீங்கி விடும்**

கதிரவன் தினமும் காலையில் கிழக்கில் தோன்றி, மாலையில் மேற்கில் மறைவது போல் இளமை என்பது முதுமை வந்ததும் மறைந்து விடுகிறது. இதனைத் திருமூலர்,

"கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே" [84]

எனத் திருமந்திரத்தில் உரைக்கின்றார். இளங்கன்று மூப்படைந்து இறந்துவிடுவதைக் கண்டும், இளமை நிலையானது என்று எண்ணி வாழக்கூடாது என்கிறார். மனிதனது மூன்று பருவங்களும் மாறுபடுவதை,

"பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே" [85]

என்றுத் திருமூலர் விளக்குகின்றார். மனிதனது மூன்று பருவங்களான பாலன், இளையவன், முதியவன் என்ற பருவங்கள் அழிந்துவிடக் கூடியதாகும் என்கிறார். முதுமைப்பருவம் அடைந்தவர்கள் எவ்வளவு வருந்தி முயன்றாலும் மீண்டும் இளமைப் பருவத்தை அடையமாட்டார்கள். இதனை,

"முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்
வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை" [86]

என்று நற்றிணைப் பாடல் உணர்த்துகின்றது. வாழ்நாளின் வகையை இவ்வளவு நாள்தான் என்று அறிந்து கூறுகின்றவர்களும் இல்லை என்கிறது.ஒவ்வொரு நாளும் இளமைப் பருவமும், இளமைப் பருவத்தால் அடையும் இன்பமும் விரைவாகக் கழிந்து கொண்டே இருக்கின்றன. எய்த அம்பின் நிழலைப் போல் இளமைப் பருவம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதை,

"வைகல் தோறும் இன்பமும் இளமையும்
எய்கணை நிழலிற் கழியும்" [87]

எனும் நற்றிணைப் பாடல் விளக்குகின்றது. இதனால் இன்பமும், இளமையும் நிலைத்தவையல்ல என்பதை அறியமுடிகின்றது. ஆழத்தால் நெடிய நீரையுடைய மடுவின்கண் குதித்து மூழ்கி மணலை எடுத்து வந்த இளமைப் பருவம் நீங்கிவிட்டது. இதனை,

"நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்துமணற் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொல்
பெருமூ தாளரே மாகிய எமக்கே" [88]

என்ற புறநானூறுப் பாடல் எடுத்துரைக்கின்றது. இளமை நீங்கி முதுமைப் பருவம் அடைந்ததால் கோலை ஊன்றித் தளர்ந்து நடக்கின்ற நிலையை அறியமுடிகிறது. இளமைப் பருவம் நிலையில்லாதது. முதுமைப்பருவம் அடைந்தவுடன் அறச்செயல்கள் செய்ய முடியாது. அதனால் நிலையில்லாத இளமை இருக்கும்போதே அறங்களைச் செய்யவேண்டும் என்பதை அறியமுடிகின்றது.

**யாக்கை நிலையாமை**

யாக்கை என்பது உடம்பாகும். அவ்வுடல் உயிருக்கு உறைவிடமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கிறது. இவ்வுடல் பிறப்பிலிருந்து வளர்ச்சிப் பெறும் தன்மையுடையது. அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவதோடு அல்லாது, இவ்வுடம்பானது வளர்ச்சித் தன்மையை அடைந்து தளர்ச்சியையும் அடைவதாக உள்ளது. அறச்செயல், தீயசெயல், கொடை, ஆசை, பிணி முதலானவற்றிற்குக் காரணமாகவும், அழியும் தன்மை உடையதாகவும் உள்ளது. இவ்அழியக் கூடிய நிலையில்லாத் தன்மையை வள்ளுவர்,

> "குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
> உடம்போடு உயிரிடை நட்பு" [89]

என உடம்புக்கும் உயிருக்கும் உள்ள நட்புப் பற்றி விளக்குகின்றார். உடம்போடு உயிருக்கு உள்ள உறவு என்பது தான் இருந்த கூடு தனியே இருக்க அதைவிட்டு வேறிடத்திற்குப் பறவை பறந்தாற் போன்றது என்பதை எடுத்துரைக்கின்றார்.உயிர் நிலையற்றது இந்த உலகமும் நிலையற்றது இதனையே வள்ளுவர்,

> "நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும்" [90]

என்றக் குறட்பா வழி எடுத்துரைக்கின்றார். இறப்பு வருவதற்குள் நல்ல அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறார். மனித வாழ்க்கையைப் பற்றி,

"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு" [91]

என வள்ளுவர் உரைக்கின்றார். இறப்பு எனப்படுவது ஒருவனுக்கு உறக்கம் வருவதைப் போன்றது. பிறப்பு எனப்படுவது உறக்கம் நீங்கி விழித்துக் கொள்வதைப் போன்றதாகும். அதனால் உடல் என்பது நிலையில்லாதது என்கிறார். இக்குறட்பாவால் இறப்பைப் பற்றியும், பிறப்பைப் பற்றியும் எடுத்துரைப்பதை காணமுடிகின்றது. அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும் என்பதனை வள்ளுவர்,

"அன்பின் வழியது உயிர்நிலை அ∴துஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" [92]

எனும் திருக்குறள் வழி உணர்த்துகின்றார். அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பு என்கிறார். எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். மழை பெய்யும் போது தோன்றி மறைகின்ற நீர்குமிழி போன்றது என்று உடம்பின் நிலையாமை பற்றி,

"படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் - தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்" [93]

என்று நாலடியார் எடுத்துரைக்கின்றது. பிறப்பு என்ற ஒன்று உண்டு என்றால் கட்டாயம் இறப்பு என்ற ஒன்று உண்டு என விளக்குகின்றது. ஆதலால்

இம்மனித உடம்பின் நிலையற்றத் தன்மையை எடுத்துரைப்பதோடு, மனிதன் இறப்பது வரை காலம் நீடிக்காமல் முன்பே அறச் செயல்கள் செய்து முடித்துவிட வேண்டும் என்பதை,

"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை - இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள்அலறச்
சென்றான் எனப்படுத லால்" [94]

என நாலடியார் உணர்த்துகின்றது. இவ்வுடலானது புல்லின் நுனியில் உள்ள நீர்த்துளிப் போன்று நிலையாமை உடையது. அதனால் இறப்பதற்கு முன்பே அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை அறிய முடிகின்றது. மலையுச்சியில் உலவுகின்ற மேகம் போலக் காணப்பட்டு பின்பு அங்ஙனம் காணப்பட்டபடியே நிலையாமல் இவ்வுடம்பு அழிந்துவிடும். இதனை,

"யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க - யாக்கை
மலையாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்" [95]

எனும் நாலடியார் பாடல் விளக்குகின்றது. நல்ல உடலைப் பெற்றவர்கள் அதனாலான அறப்பயன்களை உடனே செய்து முடித்துக் கொள்ள வேண்டும் என்கிறது. மனிதனுக்குத் தீராத நோய் வந்தால் அதைக்கண்டு அஞ்சி வாழவேண்டும் என்பதனை,

"ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்கு
இருதலையும் இன்னாப் பிரிவும் - உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும் இம்மூன்றும்
கள்வரின் அஞ்சப் படும்" [96]

எனத் திரிகடுகமானது இப்பாடலில் கூறப்பட்ட முதுமைப்பருவம், நண்பர்களுக்குச் செய்கின்ற துன்பம், தீராத நோய் இம்மூன்று நிலைகளும் கள்வரைவிட அஞ்சக் கூடியவை எனக் கூறுகின்றது. ஆனால் அறச் செயல்களின் பொருட்டு அஞ்ச வேண்டிய நிலை எதுவும் இல்லை என்பதை இதன்பால் உணரமுடிகின்றது. நோய்வந்து தன் உடம்பு அழியுங் காலத்தில் அறம் செய்யவில்லையே என்று நினைக்கின்றவர்களைப் பார்த்து நல்லாதனார்,

“பெறுதிக்கண் பொச்சாந் துரைத்தல் உயிரை
இறுதிக்கண் யாமிழந்தோம என்றல் - மறுவந்து
தன்னுடம்பு கன்றுங்கால் நாணுதல் இம்மூன்றும்
மன்னா உடம்பின் குறி” [97]

என்று உணர்த்துகின்றார். உடல் அழிவதற்கு முன் அறச்செயல்களைச் செய்ய வேண்டும் என்கிறார். பிறப்பால் வரும் உடம்பை நீக்க வேண்டுமானால் அறம் செய்யவேண்டும் என்பதனைக் காரியாசான்,

“உடம்பொழிய வேண்டின் உயர்தவம் ஆற்றீண்டு” [98]

என விளக்குகின்றார். நல்ல அறங்களைச் செய்வதால் வீடுபேறு கிடைக்கும் என்கிறார். பிற உயிர்களுக்குத் துன்பம் தராமல் இருக்கின்றவர்கள் அழிகின்ற உடலைப் பெறமாட்டார்கள் என்பதை,

“கள்ளான்சூ தென்றும் கழுமான் கரியாரை
நள்ளான் உயிரிரங்க நாவாடான் - நள்ளானாய்
ஊன்மறுத்துக் கொள்ளானேல் ஊனுடம்பு எஞ்ஞான்றும்
தான் மறுத்துக் கொள்ளான்தளர்ந்து” [99]

என்று காரியாசான் சிறுபஞ்சமூலம் பாடலில் எடுத்துரைக்கின்றார். பிறவிப் பயன்அடைய வேண்டும் என்றால் ஒழுக்க நெறியிலிருந்து தவறாமல் வாழ

வேண்டும் என்கிறது. பிற உயிர்களுக்குத் துன்பம் தராமல் வாழுகின்றவன் பிறவிப் பயனை அடைய முடியும் என்பதை அறிய முடிகின்றது. நோய் உடையவருக்கு உலகத்தில் இன்பம் எதுவுமில்லை. இதனை,

"பிணிகிடந்தோன் பெற்ற இன்பம் நல் கூர்ந்தன்று"[100]

எனும் முதுமொழிக்காஞ்சிப் பாடல் மூலம் மதுரைக்கூடலூர்கிழார் உணர்த்துகின்றார். நோயடைந்து உடம்பு மெலிந்தவன் அடைந்த உலக இன்பங்கள் எதுவும் இல்லை என்பதை எடுத்துரைக்கின்றார். துறவற ஒழுக்கத்தைப் பற்றி கணிமேதாவியார்,

"பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவில் நிரப்பிவை தாழா – அணியின்
அரங்கின்மேல் ஆடுநர்போல் ஆகாமல் நன்றாம்
நிரம்புமேல் வீட்டு நெறி"[101]

என்று ஏலாதிப் பாடல் வழி விளக்குகின்றார். நாடக மேடையின்கண் மாறி மாறிப் புனையும் கோலத்தினையுடைய கூத்தரைப் போல மாறி மாறி பிறந்து இறந்து வாழாமல் துறவற ஒழுக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்கிறார். மணக்கோலம் கொண்டவர் அன்றே பிணக்கோலம் ஏற்கும் நிலையும் உண்டு என்பதை,

"மன்றம் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப் - பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோம் ஆறே
வலிக்குமாம் மாண்டார் மனம்"[102]

என நாலடியார் வாழ்க்கை நிலையாமை பற்றிக் கூறுகின்றது. இக்கருத்தைப் போன்றே வெற்றிவேற்கையிலும்,

"மணஅணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணஅணி அணிந்து தம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்"[103]

என்று அதிவீரராமபாண்டியன் எடுத்துரைக்கின்றார். மணக்கோலத்தில் உள்ள பெண்கள் அப்பொழுதே விதவைக் கோலம் பூண்டு, கூந்தலை விரித்து ஒப்பாரி வைத்து அழுவதும் இயல்பே என்கிறார். துறவற நெறியில் நின்றவர்கள் உடலின் மீது வைத்துள்ள பற்றினை முழுவதுமாக நீக்க வேண்டும் என்பதனை முன்றுறையரையனார்,

"சிறந்ததம் மக்களும் செய்பொருளும் நீக்கித்
துறந்தார் தொடர்ப்பா டெவன்கொல் - கறங்கருவி
ஏனல்வாய் வீழும் மலைநாட அஃதன்றோ
யானைபோய் வால்போகா வாறு"[104]

எனப் பழமொழிநானூறுப் பாடல் மூலம் விளக்குகின்றார். உடலின் மீது ஆசை வைத்திருந்தால் அதனால் பல துன்பங்கள் வந்து சேரும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். உடம்பானது துன்பத்தை இட்டு வைக்கும் பை ஆகும். இதனை,

"இடும்பைக்கு இடும்பை இயல் உடம்பு இதுஅன்றே
இடும் பொய்யை மெய்என்று இராதே - இடும் கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெருவலி நோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு"[105]

என்று ஔவையார் நல்வழிப் பாடலில் உணர்த்துகின்றார். இந்த உடல் நிலையற்றது. விரைவாகத் தர்மம் செய்ய வேண்டும். அறச்செயல்கள்

செய்வதால் வீடுபேறு அடைய முடியும் என்பதை அறியமுடிகின்றது. உடலில் தோன்றிய நோயே உயிரைக் கொன்றுவிடும் என்பதனை ஔவையார்,

"உடன்பிறந்தே கொல்லும் வியாதி" [106]

என்றும், உடலில் நோய் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை,

"நோய்க்கு இடம் கொடேல்"[107]

என்றும் ஔவையார் வலியுறுத்துகின்றார். மனிதனின் உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றார். இவ்வுடலானது பலவித நோய்களுக்கு இருப்பிடமாகும் என்பதை,

"எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை – நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம்கமல நீர்போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு" [108]

எனும் நல்வழிப் பாடலின் மூலம் ஔவையார் விளக்குகின்றார். இவ்வுடலானது நிலையானது கிடையாது என்பதை அறிந்து கொண்டு இவ்வுடல் மீது கொண்டுள்ளப் பற்றை நீக்கி தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ வேண்டும் என்பதைக் கூறுகின்றார்.

வருடக் கணக்காக அழுது புலம்பினாலும் இறந்தவர் ஒரு நாளும் வரப்போவதில்லை. நாமும் ஒரு நாள் போக வேண்டியதுதான். அதனால் இருக்கும் வரை தருமம் செய்ய வேண்டும். இதனை,

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டாம்
நமக்கும் அது வழியே நாம் போம் அளவும்

எமக்கு என் என்று இட்டு உண்டு இரும்”[109]

என்று ஔவையார் நல்வழிப் பாடலில் உரைக்கின்றார். இக்கருத்தைப் போன்றே நன்னெறியில் சிவப்பிரகாசசுவாமிகள்,

“கொள்ளும் கொடும் கூற்றம் கொள்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்து அறம் செய்து உய்கவே – வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என் பெய்வார் பேசு”[110]

என எடுத்துரைக்கின்றார். வெள்ளம் வருவதற்கு முன் அணை போடாதவர், வந்த பின் என்ன செய்வார். அதைப் போல எமன் வந்து உயிரைப் பறித்துச் செல்லும் முன் தர்மம் செய்ய வேண்டும் என்கிறார். நிலையில்லாத உடம்பின்மேல் பற்று வைக்கக் கூடாது என்பதை,

“தாமோ தரன்முதலோர் சாதல்நூல் சாற்றுவதும்
பூமேலோர் பொன்றுவதுங் கண்டோமே – நாமுடலை
நேசிப்ப தென்னோ நிலையாகுஞ் சங்கரனைப்
பூசிப்ப தென்றே புகல்”[111]

என்று நீதிவெண்பா உணர்த்துகின்றது. நிலையில்லாத உடம்பின்மேல் உள்ள பற்றை நீக்கி விட்டு நிலையான இறைவன் மீது பற்று வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. இதே போன்று அறநெறிச்சாரமும்,

“அறம்புரிந் தாற்றுவ செய்யாது நாளும்
உறங்குதல் காரண மென்னை – மறந்தொருவன்
நாட்டு விடக்கூர்தி அச்சிறுங் காலத்துக்
கூட்டுந் திறமின்மை யால்”[112]

என உடலின் நிலையாமையைக் கூறி அறம் செய்ய வேண்டும் என்கின்றது. பிறப்பும், இறப்பும், விடியலும், இருளும் போன்று மாறி மாறி வரும் என்பதனைத் திருமூலர்,

"இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவது தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே" [113]

எனும் திருமந்திரப் பாடல் மூலம் விளக்குகின்றார். உடலானது அழிந்துவிடக் கூடியது என்கின்றார். உடல் என்பது தோலைக் கொண்டு மூடிய சட்டை என்பதை,

"பொய்ப்பால் நரம்பு கயிறாகமூளைஎன்பு தோல் போர்த்த
குப்பா யம்புக் கிருக்க கில்லேன் கூவிக் கொள்ளாய்கோவேயோ
எப்பா லவர்க்கும் அப்பாலாம் என்னா ரமுதேயோ
அப்பா காண ஆசைப்பட்டேன் கண்டாய் அம்மானே" [114]

என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் எடுத்துரைக்கின்றார். உடல் நிலையில்லாதது இறைவனது அருள் மட்டுமே நிலையானது என்கின்றார். நிலையில்லாத வாழ்க்கையை மனிதன் வாழுகின்றான். இதனை,

"வலைகொடு வீசி யுயிர்கொடுபோக மைந்தரும் வந்துரு
னிந்தழநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினேரேயிவர் காலமறிந்து" [115]

எனப் பட்டினத்தார் பாடல்கள் விளக்குகின்றன. இறந்தப் பின்பு சுற்றத்தார் வருந்தி அழுகின்ற நிலையில்லாத வாழ்வு என்பதை எடுத்துரைக்கின்றது.

உயிரானது எந்த உடலை எடுத்துப் பிறந்தாலும் அந்த உடலானது நிலையில்லாதது என்பதை,

> "தந்தை தாய் தமர்தார மகவென்னு மிவையெலாஞ்
> சந்தையிற் கூட்டம் இதிலோ
> சந்தேக மில்லை"[116]

என்று தாயுமானவரும் அருணகிரிநாதரும் எனும் பாடல் மூலம் விளக்கப்படுகிறது. உடலே நிலையில்லாதது. உடலின் சார்பாக வரும் பெற்றோரும், உறவினர்களும் நிலையான உறவுகள் ஆகாது என்பதை அறியமுடிகிறது. நிலையில்லாத உடலின்மீதும் அதனால் வருகின்ற உறவுகள் மீதும் பற்றை நீக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. உடல் மாறும் தன்மை உடையது. இதனை,

> "தலைமயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
> கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
> தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறித்
> தடிகொடு தத்திக் கக்கல்பெ ருத்திட்
> டசனமும் விக்கிச் சத்தியெடுத்துச்
> சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
> திலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
> திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
> தெளியவ டித்துற் றுய்த்துடல் செத்திட் டுயிர்போமுன்"[117]

எனத் தாயுமானவரும் அருணகிரிநாதரும் என்றப் பாடல் உணர்த்துகின்றது. மனிதனது உடல் மாறி அழிந்துவிடக்கூடியது என்பதை எடுத்துரைக்கின்றது. மக்கள் உடலை பேணிப் பாதுகாத்தாலும் அவை நிலையில்லாமல் அழியக்கூடியது என்பதனைச் சீத்தலைச் சாத்தனார்,

“வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்” [118]

என்று மணிமேகலைப் பாடல் மூலம் விளக்குகின்றார். இவ்வுடலானது முதுமையடைந்து சாதலை உடையது. கொடிய நோய்களுக்கு இருப்பிடமாக உள்ளது என்பதை உணர்த்துகின்றார். இக்கருத்தைப் போன்றே,

“பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்” [119]

என இவ்வடிகளும் உடம்பின் நிலையற்றத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றன. பிறப்பதும், வயது முதிர்ந்து கிழப்பருவம் அடைவதும், நோய்வாய்ப்பட்டு வருந்துவதும் இறுதியில் இறப்பதும் இவ்வுடலின் இயல்பு. இவ்வுடம்பு துன்பங்கள் எல்லாம் நிறைந்திருக்கும் ஒரு பாத்திரம். இதுவே மக்கள் உடம்பாகும் என்பதை மணிமேகலை உணர்த்துகின்றது. உடல் அழியாமல் இருப்பவர்கள் எவரும் இல்லை என்பதை,

“வீயா துடம்பொடு நின்ற உயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே

கள்ளி யேய்ந்த முள்ளியம் புறங்காட்டு

வெள்ளில் போகிய வியலு ளாங்கண்

உப்பிலாஅ வவிப்புழுக்கல்

கைக்கொண்டு பிறக்கு நோக்கா

திழிபிறப்பினோன் ஈயப்பெற்று

நிலங்கல னாக விலங்குபலி மிசையும்

இன்னா வைகல் வாரா முன்னே

செய்ந்நீ முன்னிய வினையே

முந்நீர் வரைப்பக முழுதுடன் துறந்தே"[120]

என்று புறநானூறுப் பாடல் உணர்த்துகின்றது. இறப்பதற்கு முன் அறச்செயல்கள் செய்ய வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றது. அறச்செயல்கள் செய்யவில்லை என்றால் வீடுபேறு கிடைக்காது என்பதனை புறநானூறு,

"அறவினை யன்றே விழுத்துணை யத்துணைப்

புணைகை விட்டோர்க் கரிதே துணையழத்

தொக்குயிர் வௌவுங் காலை

இக்கரை நின்றிவர்ந் துக்கரை கொளலே"[121]

எனும் பாடல்வழி விளக்குகின்றது. உடல் அழிவதற்குள் அறங்களைச் செய்யவேண்டும். வாழ்நாளின் இறுதியில் அறங்கள் செய்து கொள்ளலாம் என்று எண்ணி வாழக்கூடாது என்கிறது. அறச்செயல்கள் செய்யவில்லை என்றால் வீடு பேறு பெறுதல் அரிதாகும் என்பதை எடுத்துரைக்கின்றது. நிலையாமையை உணர்ந்து அறச்செயல்கள் செய்ய வேண்டும் என்பதை அறிய முடிகின்றது.

## இயல் சுருக்கம்

அற இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நிலையாமைக் கருத்துக்கள் இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது. உடல் அழியும் நிலை, இளமை, செல்வம், அழகு என்பவை நிலையற்றவை எனும் கருத்துக்கள் பற்றி அறியமுடிகிறது. தொல்காப்பியர் நிலையாமை பற்றி புறத்திணையில் ஒன்றான காஞ்சித் திணையில் எடுத்துக்காட்டி உள்ளார். வாழ்க்கையில் செல்வம், இளமை, யாக்கை என்பவைகள் நிலையில்லாதவைகள் என்பதை இவ்வியலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

செல்வத்தைப் பெற்றவுடன் அப்பொழுதே நிலையான அறங்களைச் செய்யவேண்டும் என்றும், நிலையில்லாத செல்வத்தின் மீது ஆசை வைக்கக்கூடாது என்றும் நிலையில்லாத் தன்மை பற்றி அறியமுடிகிறது. ஆகவே செல்வம் என்பது வண்டியின் சக்கரம் போல சுழன்று மாறி மாறி வருவதாகும். அவை ஒரே இடத்தில் நிலைத்து நிற்காது என்று விளக்கப்பட்டுள்ளது. பொருள் இருக்கின்ற போதே பல நல்ல அறங்களைச் செய்து வாழவேண்டும் என்று உணர்த்தப்பட்டுள்ளன.

செல்வம் உள்ள இளமைப் பருவத்திலேயே பல அறங்களைச் செய்ய வேண்டும். அறங்களைச் செய்தவர்கள் புண்ணிய உலகம் செல்வார்கள் என்பதை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பெருமையை அளிக்கக்கூடிய பொருளை மிகுதியாகச் சேர்த்து வைத்துள்ள செல்வர்கள் தமது முதுமைக் காலத்தில் பயன்பட வேண்டும் என்று எண்ணி செல்வத்தை இறுக்கமாகப் பிடித்து வைக்கக்கூடாது என்று விளக்கப்பட்டுள்ளன. பெரிய செல்வம் என்பது கூத்தாடும் இடத்தில் கூட்டம் சேர்வதைப் போன்றதாகும். செல்வம் நீங்கிப்

போவது கூத்து முடிந்ததும் கூட்டம் கலைவதைப் போன்றதாகும் என்பதைச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தால் அது யாருக்கும் பயன்படாமல் போய்விடும். அதைப் போன்று பிறருக்குக் கொடுக்காதவனுடைய செல்வமானது அழிந்து போய்விடும் என்று இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

இளமைப் பருவம் என்பது கடலில் மூழ்கும் மரக்கலம் போன்றது ஆதலால் இளமைப் பருவத்தைக் காட்டிலும் மனிதனது உடல் நோயில்லாது இருத்தலே சிறப்பு என்பது பற்றி நூலாசிரியர்கள் எடுத்துரைத்துள்ளதைக் காணமுடிகிறது. இளமை நீங்கி முதுமை வந்ததும் மனிதனது உடல் தோற்றம் மாறும். அழகு மாறும், தளர்ந்து நடக்கின்ற நிலை ஏற்படும் என்பதை அறியமுடிகிறது.

காற்றடிப்பதனால் மரங்களில் உள்ள கனிகள் மட்டும் விழுவதில்லை. காய்களும் விழுவதுண்டு. அதுபோலவே மரணம் என்பது முதுமையில் மட்டும் வருவதில்லை. இளமையிலும் மரணம் வருவது உண்டு என்பதை ஆராயப்பட்டுள்ளது. மனிதனது மூன்று பருவங்களான பாலன், இளையவன், முதியவன் என்ற பருவங்கள் அழிந்துவிடக் கூடியதாகும் என்பதை அறியமுடிகின்றது. ஒவ்வொரு நாளும் இளமைப் பருவமும், இளமைப் பருவத்தால் அடையும் இன்பமும் விரைவாகக் கழிந்து கொண்டே இருக்கின்றன. எய்த அம்பின் நிழலைப் போல் இளமைப் பருவம் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன என்று விளக்கப்பட்டுள்ளது.

கதிரவன் தினமும் காலையில் கிழக்கில் தோன்றி, மாலையில் மேற்கில் மறைவது போல் இளமை என்பது முதுமை வந்ததும் மறைந்து விடுகிறது. நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று

சொல்லப்படும் நிலையாமை உடையது இவ்வுலகம். இளமைப் பருவம் நிலைபெறாது. முதுமைப் பருவத்தில் நோய்கள் வந்து சேரும். அதனால் இளமைப் பருவத்திலேயே நல்ல அறங்களைச் செய்யவேண்டும் என்பதனை ஆராயப்பட்டுள்ளது. உடல் என்பது நிலையில்லாதத் தன்மை உடையது. உடல் அழிந்துவிடக் கூடியது. பிறப்பும், இறப்பும் மாறி மாறி வருவதாகும். கிழப்பருவம் அடைந்து, நோய்வாய்ப்பட்டு இறுதியில் இறப்பது இவ்வுடலின் இயல்பாகும் என்பதை அறியமுடிகிறது.

இவ்வுடலானது புல்லின் நுனியில் உள்ள நீர்த்துளிப்போன்று நிலையாமை உடையது. அதனால் இறப்பதற்கு முன்பே அறச்செயல்களைச் செய்யவேண்டும் என்று விளக்கப்பட்டுள்ளது. உடலின்மீது ஆசை வைத்திருந்தால் அதனால் பல துன்பங்கள் வந்துசேரும். உடம்பானது துன்பத்தை இட்டுவைக்கும் பை என ஆராயப்பட்டுள்ளது.

உடல் நிலையானது கிடையாது என்பதை அறிந்து கொண்டு இவ்வுடல்மீது கொண்டுள்ளப் பற்றை நீக்கி தாமரை இலைத்தண்ணீர் போல் வாழ வேண்டும் என்பதைக் காணமுடிகின்றது. பிறப்பதும், வயது முதிர்ந்து கிழப்பருவம் அடைவதும், நோய்வாய்ப்பட்டு வருந்துவதும் இறுதியில் இறப்பதும் இவ்வுடலின் இயல்பு. இதுவே மக்கள் உடம்பாகும் என்பதை அறியமுடிகின்றது.

செல்வம், இளமை, யாக்கை, புகழ் இவைகள் நிலையில்லாதவைகள் அதன் மேல் வைக்கின்றப் பற்றை நீக்கி அறங்களை மட்டும் செய்ய வேண்டும். மனிதன் இறக்கும் போது எதையும் கொண்டு செல்வது கிடையாது. அதனால் உயிர்வாழும் போதே பல அறங்களைச் செய்ய வேண்டும். செல்வம், இளமை, யாக்கை இவைகள் இருக்கின்ற போதே அறம் செய்யவேண்டும். மனிதனது வாழ்வில் எதுவும் நிலையில்லாதது. அறங்கள் மட்டுமே என்றும் நிலையானது என ஆராயப்பட்டுள்ளது.

## குறிப்புக்கள்

1. இளம்பூரணர்(உரை), தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், பா.76, ப.125.
2. மு.வரதராசனார், திருக்குறள், பா.331,ப.69.
3. மேலது, பா.337, ப.69.
4. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.1, ப.3.
5. மேலது, பா.2, ப.3.
6. மேலது, பா.5, ப.6.
7. மேலது, பா.8, ப.8.
8. மேலது, பா.10, ப.10.
9. மேலது, பா.3, ப.4.
10. மு.வரதராசனார், மு.கூ.நூ,பா.332, ப.69.
11. மேலது, பா.333, ப.69.
12. மேலது, பா.125, ப.27.
13. மேலது, பா.168, ப.35.
14. மேலது, பா.1008, ப.205.
15. துரை.இராசாராம்,பதினெண்கீழ்க்கணக்கு(மூன்றாம்பகுதி),திரிகடுகம், பா.41, ப.25.
16. மேலது, பா.59, ப.33.
17. மேலது, பா.68, ப.37.
18. துரை.இராசாராம், மு.கூ.நூ, ஆசாரக்கோவை, பா.2, ப.57.
19. மேலது, சிறுபஞ்சமூலம், பா.3, ப.111.
20. மேலது, முதுமொழிக்காஞ்சி, சிறந்தபத்து, பா.4, ப.171.

21. மேலது, பா.10, ப.172.

22. மேலது, துவ்வாபத்து, பா.31,ப.176.

23. மேலது, இல்லைப்பத்து, பா.55, ப.183.

24. மேலது, பா.58, ப.183.

25. மேலது, பொய்ப்பத்து, பா.62, ப.184.

26. மேலது, ஏலாதி, பா.41, ப.220.

27. மேலது, இன்னிலை, பா.12, ப.253.

28. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), பதினெண்கீழ்க்கணக்கு கடுகங்கடிகை மாமூலம், நான்மணிக்கடிகை, பா.5, ப.11.

29. மேலது, பா.43, ப.41.

30. மேலது, பா.46, ப.44.

31. மேலது, பா.67, ப.61.

32. மேலது, பா.70, ப.64.

33. ம.இராசமாணிக்கம் பிள்ளை, பழமொழி நானூறு, பா.209, ப.141.

34. மேலது, பா.213, ப.144.

35. மேலது, பா.214, ப.145.

36. மேலது, பா.369, ப.259.

37. ந.மு.வேங்கடசாமி நாட்டார், நானாற்பது, இன்னாநாற்பது, பா.16, ப.19.

38. முல்லை முத்தையா, நீதிநூல்கள், ஆத்திசூடி, பா.85, ப.24.

39. மேலது, கொன்றைவேந்தன், பா.12, ப.31.

40. மேலது, பா.77, ப.44.

41. மேலது, பா.81, ப.45.

42. மேலது, உலகநீதி, பா.3, ப.49.

43. மேலது, வெற்றிவேற்கை, பா.3, ப.57.

44. மேலது, பா.53, ப.64.

45. மேலது, பா.51, ப.63.

46. மேலது, மூதுரை, பா.29, ப.86.

47. மேலது, நல்வழி, பா.8, ப.93.

48. மேலது, பா.25, ப.103.

49. மேலது, பா.32, ப.106.

50. மேலது, பா.22, ப.101.

51. மேலது, நன்னெறி, பா.14, ப.121.

52. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), நீதிவெண்பா, பா.46, ப.41.

53. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.477, ப.99.

54. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), அறநெறிச்சாரம், பா.20, ப.16.

55. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நீதிநூற்கொத்து (இரண்டாம் பாகம்), நீதிநெறிவிளக்கம், பா.66, ப.65.

56. மு.சண்முகம்பிள்ளை, குறுந்தொகை, பா.283, ப.248.

57. மேலது, பா.126, ப.118.

58. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), கலித்தொகை, பாலைக்கலி, பா.8, பா.வ: 12-13, ப.25.

59. மேலது, பா.21, பா.வ: 10-11, ப.59.

60. மேலது, பா.14, பா.வ: 14-15, ப.42.

61. மேலது, பா.34, பா.வ: 18, ப.94.

62. ந.மு.வேங்கடசாமி நாட்டார், அகநானூறு, களிற்றியானைநிரை, பா.71, ப.169.

63. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மணிமேகலை, சிறைசெய்காதை, பா.வ: 135-138, ப.310.

64. இரா.இளங்குமரன், குண்டலகேசி, மனையறப்படலம், பா.480, ப.83.

65. கோ.இளையபெருமாள், புறநானூறு, பா.360, பா.வ: 11-21, ப.260.

66. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், திருமந்திரம்(முதற்பகுதி), பா. 214, ப.91.

67. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.12, ப.12.

68. மேலது, பா.13, ப.13.

69. திரு.வி.கலியாணசுந்தரனார், பட்டினத்தார் பாடல்கள்,ப.174.

70. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.14, ப.13.

71. மேலது, பா.19, ப.18.

72. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.36, ப.9.

73. மேலது, பா.336, ப.69.

74. துரை.இராசாராம், மு.கூ.நூ, ஏலாதி, பா.21, ப.209.

75. மேலது, முதுமொழிக்காஞ்சி, சிறந்தபத்து, பா.5, ப.171.

76. மேலது, சிறுபஞ்சமூலம், பா.24, ப.121.

77. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், மு.கூ.நூ, பா.223, ப.96.

78. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா.21, ப.17.

79. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), நாலடியார், பா.17, ப.16.

80. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), மு.கூ.நூ, நான்மணிக்கடிகை, பா.79, ப.71.

81. மேலது, பா.19, ப.22.

82. ந.மு.வேங்கடசாமிநாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, உதயகுமரனை வாளாலெறிந்தகாதை, பா.வ: 41-44, ப.274.

83. துரை.இராசாராம், மு.கூ.நூ, முதுமொழிக்காஞ்சி, நல்கூர்ந்தபத்து, பா.86, ப.190.

84. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார் , மு.கூ.நூ, பா.221, ப.95.

85. மேலது, பா.225, ப.96.

86. அ.நாராயணசாமி ஐயர், நற்றிணை, பா.314, பா.வ: 1-2, ப.534.

87. மேலது, பா.46, ப.81.

88. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா.243, பா.வ: 9-14, ப.196

89. மு.வரதராசனார், மு.கூ.நூ, பா.338, ப.69.

90. மேலது, பா.335, ப.69.

91. மேலது, பா.339, ப.69.

92. மேலது, பா.80, ப.17.

93. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை(இளவழகனார்), நாலடியார், பா.27, ப.24.

94. மேலது, பா.29, ப.26.

95. மேலது, பா.28, ப.25.

96. துரை.இராசாராம், மு.கூ.நூ, திரிகடுகம், பா.18, ப.15.

97. மேலது, பா.91, ப.46.

98. மேலது, சிறுபஞ்சமூலம், பா.6, ப.113.

99. மேலது, பா.21, ப.120.

100. மேலது, முதுமொழிக்காஞ்சி, நல்கூர்ந்தபத்து, பா.84, ப.189.

101. மேலது, ஏலாதி, பா.24, ப.211.

102. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்), நாலடியார், பா.23, ப.21.

103. முல்லை முத்தையா, மு.கூ.நூ, வெற்றிவேற்கை, பா.56, ப.64.

104. ம.இராசமாணிக்கம்பிள்ளை, மு.கூ.நூ, பா.395, ப.277.

105. முல்லை முத்தையா, மு.கூ.நூ, நல்வழி, பா.3, ப.90.

106. மேலது, மூதுரை, பா.20, பா.வ: 2, ப.81.

107. மேலது, ஆத்திசூடி, பா.75, ப.22.

108. மேலது, நல்வழி, பா.7, ப.92.

109. மேலது, பா.10, ப.94.

110. மேலது, நன்னெறி, பா.30, ப.131.

111. தி.சு.பாலசுந்தரம்பிள்ளை (இளவழகனார்),மு.கூ.நூ, நீதிவெண்பா, பா.51, ப.45.

112. ஆ.பொன்னுசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பா.26, ப.19.

113. ப.இராமநாதபிள்ளை, அ.சிதம்பரனார், மு.கூ.நூ, பா.208, ப.89.

114. கா.சுப்பிரமணியபிள்ளை, திருவாசகம், ஆசைபத்து, பா.2, ப.359.

115. திரு.வி.கலியாணசுந்தரனார், மு.கூ.நூ, ப.176.

116. செந்துறைமுத்து, தாயுமானவரும் அருணகிரிநாதரும், ப.124.

117. மேலது, ப.127.

118. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமிப்பிள்ளை, மு.கூ.நூ, பளிக்கறை புக்ககாதை, பா.வ: 113-121, ப.55.

119. மேலது, உதயகுமரன் அம்பலம் புக்க காதை, பா.வ: 136-139, ப.239.

120. கோ.இளையபெருமாள், மு.கூ.நூ, பா.363, பா.வ: 7-18, ப.263.

121. மேலது, பா.357, பா.வ: 6-9, ப.258.